## நிர்மாண உத்தரவாத நிதியம் - 2015

நிர்மாண உத்தரவாத நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2005 ஆகஸ்ட் 24 ஆம் திகதிய 3/136 ஆம் இலக்க நம்பிக்கை பொறுப்பு உறுதியின் 23 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிர்மாண உத்தரவாத நிதியத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒப்பந்தக்காரரொருவருக்கு 2015 யூன் 22 ஆந் திகதி மற்றும் 2015 யூன் 30 ஆந் திகதி வழங்கப்பட்ட முறையே 7,400,000 முற்பண பிணை முறி மற்றும் ரூபா 2,400,000 செயலாற்றல் பிணை முறி என்பவற்றிற்குரிய நிர்மாண ஒப்பந்தங்கள் உடன்படிக்கையின் பிரகாரம் பூர்த்தி செய்யப்படாமையால் சேவை நாடுனரால் பிணைப் பொறுப்பினை காசாக்குவதற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த கட்டளை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதியத்தினால் மீளாய்வாண்டில் விநியோகிக்கப்பட்ட முற்பண பிணை முறி மற்றும் செயலாற்றல் பிணை முறி என்பவற்றிற்குரிய நிர்மாணங்கள் முறையாக பூர்த்தி செய்யப்படாததன் காரணமாக உரிய சேவை நாடுனரால் ஒப்பந்த உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டிருக்கையில் முறையான அங்கீகாரமொன்றில்லாமலும் நிர்மாண ஒப்பந்தமொன்று இல்லாமலும் நிதியத்தினால் வேறொரு ஒப்பந்தக்காரர் ஈடுபடுத்தப்பட்டு அந்நிர்மாணம் ரூபா 5,700,000 கிரயத்தில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அதற்காக ஒப்பந்தக்காரருக்கு செலுத்த வேண்டிய தொகை கணக்கீடு செய்யப்படாமல் அவ்வொப்பந்தக்காரரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 5,199,307 தொகையை ஈடுசெய்யும் நோக்கில் முன்கொண்டு வரப்பட்டு மிகைக்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது.

### 2.3 சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்கங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **இணங்காமை** |
| --- | --- |
| (அ) 2005 ஆகஸ்ட் 24 ஆந் திகதிய 3/136 ஆம் இலக்க நம்பிக்கைப் பொறுப்பு உறுதியின் 7 ஆம் பிரிவு | நிதியத்தின் நம்பிக்கை பொறுப்பு சபையின் தலைவர் அல்லது பொறுப்பாளராக செயற்படு வதற்காக செலவிடப்பட்ட செலவினத்தை மீள் நிரப்புவதல்லாமல் தம்மால் வழங்கப்படும் சேவைக்காக எதுவித படியொன்றை நிதியத்திலிருந்து பெற்றுக் கொள்வதற்கு உரித்தொன்று இல்லாத போதிலும், அதற்கு முரணாக மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்காக தலைவர் படிகள் மற்றும் நம்பிக்கைப் பொறுப்புச் சபை படிகள் என ரூபா |

| | | |
|---|---|---|
| | | 7,377,100 கூட்டுத்தொகையான படிகள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தன. |
| (ஆ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஜ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | கணனிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடொன்று முறையாகப் பேணப்பட்டி ருக்கவில்லை. |

## 2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக அவற்றிற்கு முன்னால் காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | செலவின மீள் நிரப்பல்கள் | 450,000 | தீர்வு செய்யப்பட்ட பட்டியல்கள் |
| (ஆ) | கடன்பட்டோர் | 70,576,790 | மீதி உறுதிப்படுத்தல்கள் |
| (இ) | தளபாடங்கள் பொருத்திகள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 6,633,368 | நிலையான சொத்துப் பதிவேடு |
| (ஈ) | முற்கொடுப்பனவுகள் | 613,367 | விரிவான பட்டோலை |
| (உ) | வழியில் காசு | 5,239,219 | விரிவான பட்டோலை |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 36,930,287 மிகையாக இருந்ததுடன், அதனோடெத்த முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 133,519,853 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 96,589,566 வீழ்ச்சியொன்று காணப்பட்டது. பிணை முறி வருமானம் ரூபா 54,827,041 இனாலும், விசேட செயற்திட்ட பிணை முறி வருமானம் ரூபா 25,643,750 ஆலும் நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 20,644,467 ஆலும் குறைவடைந்தமை மற்றும் ஒப்பந்த சேவை செலவினம் ரூபா 3,585,960 ஆல் அதிகரித்தமை என்பன மேற்குறித்த வீழ்ச்சிக்கு பிரதான காரணங்களாக இருந்தன.

மீளாய்வாண்டினதும் முன்னைய 4 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2011 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரை நிதி விளைவுகள் தொடர்ச்சியாக அதிகரித்திருந்த போதிலும், 2014 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2015 ஆம் ஆண்டின் போது நிதி விளைவுகள் 72 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது. ஊழியர் ஊதியம், அரசிற்கு செலுத்திய வரிகள் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைக் கருத்திற் கொள்ளும் போது 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 24,726,684 தொகையான நிதியத்தின் பங்களிப்பு 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 166,685,641 வரை தொடர்ச்சியாக அதிகரித்திருந்த போதிலும், 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2015 ஆம் ஆண்டின் போது அது 57 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

2005 ஆகஸ்ட் 24 ஆந் திகதிய 3/136 ஆம் இலக்க நம்பிக்கைப் பொறுப்பு உறுதியின் பிரகாரம் உள்நாட்டு நிர்மாண ஒப்பந்தக்காரர்களுக்கு அவர்களின் நிர்மாணங்களுக்குரித்தாக சமர்ப்பிப்பதற்கு தேவையான கேள்வி பிணை முறி மற்றும் செயலாற்றல் பிணை வழங்கல் மற்றும் அதற்காக தேவையான நிதியங்களை உருவாக்குவதல் நிர்மாண உத்தரவாத நிதியத்தின் நோக்கங்களாகும். கடந்த ஆண்டில் வழங்கப்பட்ட பிணை முறிகளின் எண்ணிக்கை மற்றும் மீளாய்வாண்டில் வழங்கப்பட்ட பிணை முறிகளின் எண்ணிக்கை முறையே 3,039 மற்றும் 1,559 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக வழங்கப்பட்ட பிணை முறிகளின் எண்ணிக்கை 1,480 அல்லது 48.7 சதவீதமான குறைவொன்று அவதானிக்கப்பட்டது..

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமில்லாமலும் செயலாற்றல் மதிப்பீடொன்று இல்லாமலும் நிறுவகத்தில் ஒப்பந்த அடிப்படையில் சேவை புரியும் 05 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 480,000 ஆன ஊக்குவிப்பு படியொன்றும் பணிப்பொறுப்பு அடிப்படையில் சேவையில் ஈடுபட்டுள்ள 29 உத்தியோகத்தர்களுக்கு முன்னுரிமை படிகளாக ரூபா 1,857,000 கொடுப்பனவும் செய்யப்பட்டிருந்தன.

(ஆ) மாதாந்த வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த 02 மோட்டார் வாகனங்களுக்காக மீளாய்வாண்டில் ரூபா 2,064,334 செலவிடப்பட்டிருந்ததுடன், எரிபொருளுக்காக ரூபா 494,098 செலவிடப்பட்டிருந்தது. இம்மோட்டார் வண்டி ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்ட தூரத்தின் அளவு, கடமை மற்றும் உரிய உத்தியோகத்தர் தொடர்பாக தகவல்கள் காண்பிக்கப்படும் வகையில் நாளாந்த ஓட்டப் பதிவுகள் தயரிக்கப்படாமல் இருந்ததுடன், ஓடப்பட்ட கிலோமீற்றரொன்றின் கிரயம் கணக்கிடப்பட்டு செலவினத்தின் சிக்கனம் மற்றும் வினைத்திறன் என்பன உறுதிப்படுத்தப்படாமல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) நிதியத்தின் தலைமை அலுவலகத்தின் மின்சாரப் பயன்பாட்டிற்காக உள்ளவாறான கிரயத்திற்குப் பதிலாக மாதமொன்றுக்கு ரூபா 100,000 மதிப்பிடப்பட்ட தொகையொன்று வீதம் மீளாய்வாண்டின் போது ரூபா 1,200,000 நிதியத்தினால் கட்டிட உரிமையாளருக்கு செலுத்தப்பட்டிருந்தது. முறையான மின்சாரப் பட்டியலொன்று இல்லாதிருந்தமையால் இச்செலவினம் உண்மையான செலவினமொன்றாக கணக்காய்வின் போது ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

### 4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 04 ஆண்டு காலமாக கடன்பட்டோர் ஒருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 20,800,000 ஐ அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்காமல் 2015 யூன் 04 ஆந் திகதிய 046 ஆம் இலக்க சபைத் தீர்மானத்தின் மூலம் கணக்குகளிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஆ) ஒப்பந்தக்காரர்களுக்காக சேவைநாடுனர்களுக்கு நிதியத்தினால் வழங்கப்பட்ட பிணை முறி பணமாக்கப்பட்டதன் காரணமாக நிர்மாண உத்தரவாத நிதியத்தினால் சேவைநாடுனர்களுக்கு செலுத்தப்பட்ட முன்னைய ஆண்டுகளுக்குரிய ரூபா 22,840,202 தொகையும் மீளாய்வாண்டிற்குரிய ரூபா 47,736,588 தொகையும் உரிய ஒப்பந்தக்காரர்களிடமிருந்து அறவிடுவதற்காக தீர்ப்பாளர் நியமிக்கப்பட்டு சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிதியத்தின் கணக்குகளைத் தயாரிப்பதற்காக நிர்மாண பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தின் 17 உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 1,490,400 செலுத்தப்பட்டிருந்தது. அதற்காக அவர்களுக்கு எந்த வகையான நியமன வழங்கலொன்றோ அல்லது சேவை உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டோ இல்லாதிருந்தமையால் அக்கொடுப்பனவுகளின் வெளிப்படைத் தன்மை கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(ஈ) 2011 சனவரி 27 ஆந் திகதிய பீஈடீ/56 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதி அமைச்சின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் நிலையான வைப்புக்களில் ரூபா 778,972,629 முதலீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) நிதியத்தின் தீர்ப்பாளரான திறைசேரி செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாமல் நிதியத்தினால் வழங்கப்படக்கூடிய பிணை முறியின் பெறுமதியின் உச்ச எல்லை குறித்த காலப்பகுதியில் நிதியத்தின் உரித்தில் பத்து மடங்கென 2012 பெப்ரவரி 08 ஆம் திகதிய திருத்தப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பு உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஊ) நிதிப்பிரமாணம் 71 மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 30 ஆம் இலக்க சுற்றறிக்கை தொடர்பாக கருத்திற்கொள்ளமல் நிறுவகத்தின் முகாமைத்துவ சபையால் பின்வரும் கொடுப்பனவுகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன.

(i) நிதியத்தின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் உட்பட ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்களுக்கு அவர்களின் மாதாந்த சம்பளத்திற்கு மேலதிகமாக ரூபா 300,000 வாழ்க்கைச் செலவின படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ii) ஒரு உத்தியோகத்தருக்கு வருடாந்தம் கூடியது ரூபா 500,000 இற்கு உட்பட்ட வகையில் திடீர் விபத்து மற்றும் மருத்துவப் பட்டியல் என்பவற்றை மீள் நிரப்புவதற்காக 09/2013 ஆம் இலக்க முகாமைத்துவ சபை தீர்மானத்தின் மூலம் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இதற்காக மீளாய்வாண்டின் போது 21 உத்தியோகத்தர்களுக்கு மருத்துவ பட்டியல்களைத் தீர்ப்பதற்காக நிதியத்திலிருந்து ரூபா 2,089,132 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(iii) திறைசேரி அங்கீகாரமொன்று இல்லாமல் சேமிக்கப்பட்ட விடுமுறை களுக்காக நிதியத்தின் உத்தியோகத்தர்களுக்கு ரூபா 263,786 செலுத்தப்பட்டிருந்தது.

(எ) நிதியத்தினால் ஒப்பந்தக்காரர்களுக்கு பிணை மற்றும் முறிகளை வழங்கும் போது பிணைப் பணத்தை பெற்றுக்கொள்வதற்குப் பதிலாக ஒப்பந்தக்காரர்களுக்கு உரிய சேவைநாடுனர்கள் முற்பணமாக செலுத்திய ரூபா 24,280,338 பணத்தை எவ்வித அதிகாரமுமில்லாமல் நிதியத்தின் பணமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

## 4.4 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2009 யூலை 08 ஆம் திகதிய பீஈடி/பீயூ ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் பிரகாரமும் 2006 செப்தெம்பர் 22 ஆம் திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கைக்கு இணங்கவும் அனைத்து நியதிச் சட்ட நிறுவனங்களாலும் தனது நிறுவனக் கட்டமைப்பு மீளமைக்கப்பட வேண்டியிருந்ததுடன், ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறை,

பதவியணியினர் எண்ணிக்கை மற்றும் சம்பள அளவு என்பன திருத்தப்பட்டு தேசிய சம்பள மற்றும் ஊழியர் ஆணைக்குழுவினது பரிந்துரை மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் காணப்படாத ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட 05 உத்தியோகத்தர்களைக் கொண்டும் பணிப்பொறுப்பு அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட 29 உத்தியோகத்தர்களைக் கொண்டும் நித-யம் நடாத்திச் செல்லபடுவதால் பதவியணியினரொன்று இல்லாமல் அதன் நடவடிக்கைகள் தொடர்பாக பொறுப்புக் கூறுவதற்கு உள்ள இயலுமை தொடர்பாக தெளிவுபடுத்தப்படவில்லை.

(ஆ) பணிப்பொறுப்பு அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்களின் சேவைக்காலம் பணிப்பொறுப்பின் அடிப்படையில் பிரித்து வழங்காமல் தொடர்ச்சியாக 01 வருடம் முதல் 11 ஆண்டுகள் வரையான காலம் சேவை பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன், அவர்களுக்கு பணிப்பொறுப்பு அடிப்படையில் கொடுப்பனவு செய்வதற்குப் பதிலாக மாதாந்த சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. இதில் 20 உத்தியோகத்தர்களின் தொடர்ச்சியான சேவைக்காலம் 03 ஆண்டுகளை மிகைத்திருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

நிதியத்தின் ஆரம்பத்திலிருந்தே அதன் நடவடிக்கைகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வு பிரிவு மூலமோ அல்லது அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு பிரிவின் மூலமோ உள்ளகக் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 5.2 கணக்காய்வுக் குழு

நிதியம் ஆரம்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்திலிருந்தே கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் கூட்டங்கள் எதுவும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் நிதியத்தின் உத்தியோகத்தர்கள் அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்களுக்கும் அழைக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 ஆண்டறிக்கையை சபையில் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ / 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 2002 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையான ஆண்டறிக்கைகள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடுகள் அவ்வப்போது நிதியத்தின் தலைவருக்கு அறிக்கையிடப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | அவதானிப்புக்கள் |
| --- | --- |
| (அ) பதவியணியினர் நிர்வாகம் | நிதியத்திற்காக வேறாக ஊழியர் தொகுதியொன்று ஆட்சேர்க்கப்பட்டு முறையான தொழில் விபரங்கள் வழங்கப்பட்டு செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) நிதி முகாமைத்துவம் | நம்பிக்கை பொறுப்பின் 7 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் செலவினம் முகாமைத்துவம் செய்யப்படாமை |